# கருப்பூர் பேரூராட்சி

## சேலம் மாவட்டம்

## ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

**ந.க.எண்.261/2022** **நாள்.27.06.2022**

சேலம் மாவட்டம், கருப்பூர் முதல்நிலை பேரூராட்சி 2022–2023ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புர மேம்பாடு திட்டம் (KNMT) திட்டத்தில் கீழ்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் **(Two Cover system)** கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கருப்பூர் முதல்நிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்றவரால் **19.07.2022 ம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.** ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **18.07.2022** பிற்பகல் 3.00 மணி வரை E-Token / Digital Signature card யை உபயோகித்து http://tntenders.gov.in மற்றும் **www.tenders.tn.gov.in** என்ற இணையதளத்திலிருந்து தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் அட்டவணை கலம் எண் 4ல் காணும் விவரப்படியான முன்வைப்புத் தொகைக்கு **"செயல் அலுவலர் கருப்பூர் முதல்நிலை பேரூராட்சி"** (The Executive Officer, Karuppur Town Panchayat) என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கி வரைவோலையை (DD/Banker Cheque) முன் வைப்புத் தொகையாக இணைத்து **19.07.2022 பிற்பகல் 3.00 மணிக்குள் இவ்வலுவகத்திற்கு வந்து சேருமாறு** அனுப்ப வேண்டும். மேலும் **வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 19.07.2022 அன்று செவ்வாய்க் கிழமை மாலை 3.30 மணிக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்றவரால் நேரில் ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 18.07.2022ம் தேதி திங்கள் கிழமை மாலை 5.00 மணி வரையில் இப்பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | முன் வைப்பு தொகை | ஒப்பந்தப் புள்ளி நமுனா விற்பனை வரி உட்பட | ஒப்பந்த தாரரின் தகுதி | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கருப்பூர் பேரூராட்சி வார்டு எண் 2 சர்வே எண் 29ல் உள்ள சமுத்திர ஏரியினை மேம்பாடு செய்தல் | 170.50 | 341000 | 17700 | Class I | 6 மாதங்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள் இப்பேரூராட்சியில் 2022–2023ஆம் ஆண்டிற்கு பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், கருப்பூர் முதல்நிலை பேரூராட்சி என்ற முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.
5. ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி வரப்பபடுமேயானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்ததாரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
8. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்று வேலை உத்திரவு வழங்கப்படும்.
9. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.
10. வேலை முடிக்கப்படவேண்டிய கால அளவு 6 மாதங்களாகும். அவ்வாறு வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.
11. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 10 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.
12. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

13. சாலை வேலைகளை பொருத்த வரையில், கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில் முடித்த பின்னர்தான் முழுத் தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

14. ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் மற்றும் தார் **(80/100** மற்றும் **Emulsion**) வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

15. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம்வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

16. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை காசோலையாக விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்

17. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும் படியாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.

18. வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) பணித்தரக் காப்புத் தொகை (PSD) | : | 5 % |
| ஆ) வருமானவரி (IT) | : | 2 % |
| இ) பொருட்கள் மற்றும் சேவை வரி (GST) | : | 2 % |
| ஈ) கட்டுமான தொழிலாளர் சந்தா (MWF) | : | 1 % |

19. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத்தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர் தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

20. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த அடங்கிய விளம்பரப்பலகை நிறுவப்படுதல் வேண்டும்.

21. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகள் முடிக்க வேண்டும்.

22. **E-Tender** மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

23. மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவீதத் தொகையில் வங்கி உத்திரவாதச் சான்று இணைக்க வேண்டும் அல்லது கூடுதல் காப்புத் தொகையினை ரொக்கமாக இவ்வலுவலகத்தில் செலுத்திய பிறகு வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

24. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள்வேலைகள் செய்ய வேண்டும்.

25. இத்திட்டப் பணி முடிக்கப்பட்டவுடன், மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை, இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்க வேண்டும்.

26. **Engineering Manual** படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்தகாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் **(Penalty for slow progress)** அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதிக்கப்படும்

27. பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட 5 % பணி காப்பீடு தொகை, சாலை பராமரிப்பு பணி ஒரு வருடம் முடிந்த பின்னர் பணியின் சரித் தன்மையை பொறியாளர்கள் ஆய்வு செய்து அறிக்கை பெற்ற பின்பு காப்பீடு தொகை திரும்ப வழங்கப்படும்.

28. பணிகளின் ஒப்பந்த மதிப்பில் (Contract Value) 2 சதவிதம் முன் வைப்புத் தொகையாக (EMD) செலுத்த வேண்டும்.

29. கூடுதல் விபரங்களை இணையதள ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் கண்டு அதனை பின்பற்ற வேண்டும். இணையதளத்தில் வெளியிட்டுள்ள ஒப்பந்த ஆவணம் இறுதியானதாகும்.

30. இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

**முக்கிய தினங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்ததாரர் முன் கலந்தாய்வு கூட்டம் (Pre-Bid Meeting ) நடைபெறும் நாள் மற்றும் நேரம் | **11.07.2022**<br>**முற்பகல் 11.00 மணி** |
| 2. | ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி மற்றும் நேரம் | **30.06.2022 முதல் 18.07.2022 பிற்பகல் 3.00 மணி வரை** |
| 3. | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் (மின்னணு மூலம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளியையும் சேர்த்து) | **19.07.2022**<br>**பிற்பகல் 3.00 மணி வரை** |
| 4. | ஒப்பந்தப்புள்ளி உறையில் தொழில்நுட்ப உறை ஆவணம் திறப்பு நாள் மற்றும் நேரம் | **19.07.2022**<br>**பிற்பகல் 3.30 மணி** |
| 5. | ஒப்பந்தப்புள்ளி உறையில் தொழில்நுட்ப உறை ஆவணம் மதிப்பீடு செய்யும் நாள் (பே.உ.இ. அலுவலகம்) | **22.07.2022** |
| 6. | ஒப்பந்தப்புள்ளி உறையில் விலைப்புள்ளி உறை ஆவணம் திறப்பு நாள் மற்றும் நேரம் | **25.07.2022**<br>**காலை 11.00 மணி** |

31. மேற்கண்ட தினங்களில் எதிர்பாராமல் அரசு விடுமுறை ஏதேனும் அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெற்றுக்கொள்வது மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு அடுத்த வேலை நாட்களில் நடைபெறும்.
32. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளிகளின் ஆவணங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. ஒப்பந்ததாரர்கள், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் தகுதிச் சான்றிதழ், நிதி நிலை அறிக்கை, விற்பனை வரிச் சான்றிதழ் போன்ற விவரங்களை ஒரு உறையில் வைத்து, உறையின் வெளிப்புறத்தில் “Technical Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும். மற்றொரு உறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் படிவம் வைத்து

அவ்வுறையின் வெளிப்புறத்தில் "Price Bid" என்று குறிப்பிடப்பட வேண்டும். இவ்விரண்டு உறைகளையும் மூடி முத்திரையிட்டு மற்றொரு பெரிய உறையில் போட்டு அதனையும் மூடி முத்திரையிட்டு அவ்வுறையின் மேல் வேலையின் பெயர், மதிப்பீடு, Package No. ஒப்பந்தப்புள்ளி நாள், ஒப்பந்ததாரர் பெயர் போன்ற விபரங்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் முதலில் "Technical Bid" என்று குறிப்பிட்டுள்ள உறை பிரிக்கப்பட்டு. அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ் நகல் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே "Price Bid" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி தகுதியானதாக இல்லையெனில் "Price Bid" உறை திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

**2. "Technical Bid" உறையில் வைக்கப்பட வேண்டியவை**

1. ஒப்பந்தாரர் முதல் நிலை ஒப்பந்தாரராக பதிவு செய்யப்பட்ட சான்று ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்துவதில் 5 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் என்பதற்கான சான்று
2. ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் செயல்படுத்தியதில், தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு மேல் ஒரே பணியில் செயல்படுத்தியமைக்கான சான்று
3. ஒப்பந்ததாரர்கள் கடந்த 3 ஆண்டுகளில் தொடர்ச்சியாக செயல்படுத்திய வேலைகளுக்கான மதிப்பு தற்போது கோரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பில் 50% சதவீதத்திற்கு அதிகமாக உள்ளது என்பதற்கான சான்று
4. ஒப்பந்ததாரர் தற்போது கோரும் ஒப்பந்தப் பணிக்கான மதிப்புத் தொகையில் 15% சதவீதத்திற்கு அதிகமான தொகையை வங்கி இருப்பாக வைத்துள்ளமைக்கான வங்கி பாஸ் புத்தக நகல் அல்லது வங்கி மேலாளர் சான்று.
5. தார்சாலை பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் அந்தந்த பணிகளுக்கு தேவையான கீக்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் சொந்தமாக உள்ளமைக்கான சான்றுகள் இணைக்க வேண்டும். அல்லது கீழ்க்காணும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் உரிமையாளர்களிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்பந்த நகலினை இணைக்க வேண்டும். மேலும், உரிமையாளர்களின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான R.C. புக் போன்ற ஆவணங்களின் நகல்களை இணைக்க வேண்டும்.
6.

| Sl No | EQuipment | Capacity | Nos |
|---|---|---|---|
| 1 | JCB Mini Excavator | 1 No | 1 |
| 2 | Ajax self Lodder | 1 No. | 2 |
| 3 | Concrete Pump | 1 No | 3 |
| 4 | Concrete Vibrator with Needle | 2 Nos. | 4 |
| 5 | Excavator (Earth Movers) | 1 No. | 5 |
| 6 | Water Lorry | 1 No. | |
| 7 | Tipper Lorry | 2 Nos. | 6 |
| 8 | Steel Centering Materials | 1000 sqm | |
| 9 | Shutter Props 4 M Length | 1000 No | 7 |

7.ஒப்பந்ததாரர்கள் விற்பனை வரி, GST செலுத்தியமைக்கான (Latest Tin GST Return) சான்று இணைக்கப்பட வேண்டும்.

8. மேற்காணும் சான்றுகள் அனைத்தும் Notary Public Officers அல்லது செயற்பொறியாளர் பணியிடத்திற்கு குறையாத உயர் அலுவலர்களால் சான்றொப்பம் பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

9. ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டமைக்கு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த ஆவணங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

10. The work Executed by the Contractor under the contract shall be maintained at contractors risk until the work is taken over by the Engineer. The contractor shall accordingly arrange his own insurance, against fire and other usual risk during such period which includes natural calamities such as floods, or any other acts of God and no claim by the contractor for the above mentioned will be entertained by Department at any stage. the Contractor shall also take Personal Accident Insurance Policy in favour of each worker employed by him, any job pertaining to this contract. He many also ensure that similar Personal accident insurance policy available in the market is taken in respect of each workman employed by his sub contractor. If the Contractor fails to take out the Personal Accident Insurance Policy available in the market as above and accident occurs, and amount equivalent to the contractor for the work done or from any other work in Department and kept in deposit. Account for being paid ultimately to the injured person or to the heirs in case of death

**ஒம்/—சி.நீலாதேவி,**
**செயல் அலுவலர்,**
கருப்பூர் முதல்நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

பெறுதல்
பதிவு பெற்ற Class I ஒப்பந்ததாரர்கள்
கருப்பூர் பேரூராட்சி

நகல் :

1) உதவி இயக்குநர் பேரூராட்சிகள் சேலம் மண்டலம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், சேலம் மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
3) இளநிலைபொறியாளர், ஓமலூர் பேரூராட்சி (தொகுப்பு)
4) அலுவலக விளம்பர பலகைக்கு